ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2056/39 - 2018 පෙබරවාරි මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.02.01

*2056/39 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 12/2017*

**2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டம்**

8 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிய 1536/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் ஒழுங்குவிதிகளின் 9 ஆம் ஒழுங்குவிதியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 7 ஆந் திகதிய 1983/14 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழாமிற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் ஒருவரான திரு. ஜெரோம் சி. ஹென்றிகஸினால், பதவி வறிதாக்கப்பட்டமை காரணமாக, சொல்லப்பட்ட திரு. ஜெரோம் சி. ஹென்றிகஸினால் பதவிக்காலத்தின் முடிவுறாத காலப்பகுதியின் போது பதவி வகிப்பதற்கு திரு. டிலீப்பா தர்மப்பிரிய என்பவரை இத்தால் நியமிக்கின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க,
தேசிய கொள்கைகள் மற்றும்
பொருளாதார விவகாரங்கள் அமைச்சர்.

கொழும்பு,
2018, பெப்புருவரி 01.

1A - G 26152 — 08 (2018/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*